DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Continuation of Chief Examination of Witness

07.12.2022

**அ.சா. 1- சுசீலா**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:**

1) எனது தாத்தா சித்தகவுண்டருக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் பெயர் சின்னப்பகவுண்டர், இளைய மகன் பெயர் குருசாமி ஆகும். மேற்படி குருசாமி 1974 ம் ஆண்டு புதுப்பட்டியைச் சேர்ந்த மாரியம்மாள் என்பவரைத் திருமணம் செய்தார். எண்ணெய்த் தேய்ப்பிற்காக மாரியம்மாள், தனது அப்பா வீட்டிற்கு சென்றவர், அதன் பிறகு திரும்ப வரவில்லை. மேற்படி குருசாமி அவரது மனைவி மாரியம்மாளை பல முறை அழைத்தார். ஆனால் அவர் வரவில்லை. பஞ்சாயத்தார் மூலமும் அழைத்தார். அப்போதும் வரவில்லை. சிறிது நாட்கள் கழித்து மேற்படி மாரியம்மாள், சின்னத்தம்பி என்பவருடன் உறவு முறையில் இருந்ததும், திருமணம் செய்து கொள்ள முடிவு செய்திருந்ததும் தெரிய வந்தது. பின்னிட்டு கோபியைச் சேர்ந்த வழக்கறிஞர் செல்லமுத்து என்பவர் மூலம் குருசாமி, மாரியம்மாளுக்கு அறிவிப்பு அனுப்பினார். அதைப் பெற்றுக் கொண்ட மாரியம்மாள், அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை, திரும்பி வரவும் இல்லை.

2) அறிவிப்பு அனுப்பி இரண்டு மாதங்கள் கழித்து, 1975 ம் ஆண்டு, எனக்கு 6 வயது நடந்த போது, தனக்கும் ஒரு வாரிசு வேண்டும் என்ற அடிப்படையில், மேற்படி குருசாமி ஆணைக்கவுண்டனூர் அக்கினி மாரியம்மள் கோவிலில் குல வழக்கப்படி என்னை மகளாக தத்து எடுத்துக் கொண்டார். அங்கு சாட்டைப் பூசாரி, குழந்தையப்பன் ஆகியோர் முன்னிலையில் தத்துக் கொடுத்தார்கள். மேற்படி குருசாமி குருவரெட்டியூர் அரசு பள்ளியில் என்னைச் சேர்த்து படிக்க வைத்தார். 1 ம் வகுப்பு முதல் 5 ம் வகுப்பு வரை

குருவரெட்டியூர் அரசு பள்ளியிலும், 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை வேறொரு அரசு பள்ளியிலும் படிக்க வைத்தார். அவர் எனது அப்பா என்ற முறையில் என்னைப் படிக்க வைத்தார். பின்னர் தற்போதிருந்து 30 வருடங்களுக்கு முன்பு பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் வைத்து, பூலாம்பட்டியைச் ராசு என்கிற ராசுப்பையனுக்கு என்னைத் திருமணம் செய்து வைத்தார். எனக்கு சீர்சிறப்புகள் ஆகியவற்றை அவர்தான் செய்தார். அவருக்கு சொந்தமாக கள்ளாங்கட்டுத் தோட்டத்தில் 2 ஏக்ககர் நிலம் இருந்தது. அதன் சர்வே எண்.120, 121 ஆகும். அது இளிப்பிளி கிராமத்தில் இருந்தது. மேற்படி இரண்டு ஏக்கர் நிலத்தில் நானும், எனது தந்தை குருசாமியும் உழவடை செய்து வந்தோம்.

3) அந்த காட்டைப் பொறுத்து, பக்கத்து காட்டுக்காரரான சின்னச்சாமி வகையறாவுடன் தகராறு இருந்தது. மேற்படி சின்னச்சாமி வகையறா இந்த வழக்கில் எதிரிகளாக உள்ளனர். சில நாட்கள் மேற்படி காட்டை நாங்கள் ஓட்டக் கூடாது என்று சின்னச்சாமி வகையறா தடுத்து விட்டார்கள். மேற்படி காட்டை நாங்கள்தான் உழவடை செய்து வந்தோம். எனக்கு திருமணம் முடிந்த சில நாட்கள் கழித்து எனது தந்தை குருசாமிக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது. நானும், எனது கணவரும், எனது தந்தை குருசாமிக்கு பல மருத்துவமனைகளில் சிகிச்சை பார்த்தோம். மேட்டூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் பெருந்துறை ஆகிய பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் அவருக்கு மருத்துவம் பார்த்தோம். அவருக்கு காசநோய் இருந்ததாக சொன்னார்கள். சில நாட்கள் கழித்து 14.01.2004 ம் தேதி கள்ளாங்காட்டு தோட்டத்தில் உள்ள வீட்டில் வைத்து காலை 9 மணி சுமாருக்கு எனது தந்தை குருசாமி இறந்துவிட்டார். அன்று சுமார் மாலை 6 அல்லது 7 க்குள் அவரை நல்லடக்கம் செய்து விட்டேன்.

4) எங்கள் தாத்தா, பாட்டி, அத்தை ஆகியோரை வைத்த சின்னப்பகவுண்டரின் பட்டா பூமியில், எனது தந்தை குருசாமியையும் நல்லடக்கம் செய்து விட்டோம். அதன்பிறகு மேற்படி நிலத்தை நான் ஓட்டி வந்தேன். தற்போதும்அந்த நிலத்தை நான் தான் ஓட்டிவருகிறேன். எனது தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே, பக்கத்து காட்டைச் சேர்ந்த சின்னசாமி, பொன்னுசாமி ஆகியோர் எங்கள் நிலத்தை குறைந்த விலைக்கு விற்கச்

சொல்லி கேட்டார்கள். அதற்கு மேற்படி குருசாமி, அவருக்கு மகளாக நான் இருப்பதால் அதை விற்க முடியாது என்று அவர்களிடம் கூறிவிட்டார். அதை மனதில் வைத்துக் கொண்டு, மேற்படி சின்னசாமி மற்றும் பொன்னுசாமி ஆகியோர், புதுப்பட்டியைச் சேர்ந்த, சின்னத்தம்பி மனைவி மாரியம்மாள் மற்றும் அவரது மகன் குருசாமி ஆகியோரைக் கூட்டி வந்து, சின்னப்பகவுண்டர், அங்கமுத்து மற்றும் பச்சமுத்து ஆகியோர் மீது ஒரு சிவில் வழக்கு தாக்கல் செய்து விட்டார்கள். அந்த விவரம் எனக்குத் தெரியாது. சின்னத்தம்பி மகன் குருசாமி, தவறாக தகவல்களைச் சொல்லி பவானி நீதிமன்றத்தில், தவறான வழக்கை ஆள்மாறாட்டம் செய்து தாக்கல் செய்து, தவறான தீர்ப்பைப் பெற்றுள்ளார். மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் சென்னிமலையைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவரிடம் பழைய தேதியில் முத்திரைத்தாளைப் பெற்று, மேற்படி சின்னத்தம்பி மனைவி மாரியம்மாள் மற்றும் குருசாமி ஆகியோர், மாரிமுத்து என்பவரிடம், எங்கள் நிலத்தைப் பொறுத்து ஒரு விற்பனை ஒப்பந்தம் போட்டுள்ளனர். அதற்கு சாட்சியாக சென்ட்ராயன் மற்றும் ரங்கநாதன் ஆகியோர் இருந்துள்ளனர்.

5) மேற்படி சென்ட்ராயன், குருசாமியின் பெரியம்மா மகன் ஆவார். அதன் பிறகு மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரையம் செய்துவிட்டார்கள். அதில் சின்னச்சாமி மற்றும் பொன்னுசாமி ஆகியோர் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளனர். சின்னச்சாமி என்பவர் பக்கத்து காட்டுக்காரர், அவருக்கும், எனக்கும் ஏற்கனவே நிலம் தொடர்பாக வழக்கு இருந்தது. மேற்படி சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பது தெரிந்தும், மேற்படி சொத்தைப் பிடுங்கி குருசாமிக்கு கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் அடிப்படையில், மேற்படி பத்திரங்களை ஏற்படுத்தி உள்ளார்கள். குருசாமி மனைவி மாரியம்மாள் என்றும், குருசாமி மகன் குருசாமி என்றும் தவறாக குறிப்பிட்டு, பெயரை மாற்றி எழுதி பொய்யாகச் சொல்லி பத்திரம் எழுதி விட்டார்கள். அது போலியான பத்திரம் ஆகும். நான் மேற்படி நிலத்தை ஓட்டி வந்தபோது ஒரு நாள் மாரிமுத்து, மேற்படி காட்டிற்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், மேற்படி காட்டை ஓட்டக் கூடாது என்று பிரச்சனை செய்தார்.

6) நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் அம்மாபேட்டை போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன்பிறகு வழக்கறிஞர் மூலம் விசாரித்து சம்பவங்களைத் தெரிந்து கொண்டேன். அதன்பிறகு அம்மாபேட்டை போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவகத்தில் புகார் கொடுத்தேன். அங்கிருந்து மேற்படி புகார் விசாரணைக்காக மாவட்ட குற்றப்பிரிவுக்கு அனுப்பப்பட்டது, அங்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்பிறகு நான் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகினேன். அங்கு இந்த வழக்கை விசாரிக்கச் சொல்லி உத்தரவு பெற்றேன். அதன் பிறகு மேற்படி உத்தரவின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தார்கள். அதன் பிறகு விசாரணைக்கு பலமுறை சென்றேன். எனக்கு எந்த வித பதிலும் சொல்லவில்லை. பின்னிட்டு எனக்கு பதில் சொல்லத் தேவையில்லை என்றும், வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றும், நீதிமன்றம் சென்று பார்த்துக் கொள்ளச் சொல்லி என்னை அனுப்பி விட்டார்கள்.

7) பிறகு மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை நீதிமன்றம் மூலம் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு நீதிமன்றத்தில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி வழக்கு தாக்கல் செய்தேன். எதிரிகள் ஆள்மாறாட்டம் செய்து, எனது நிலத்தை பொய்யாக கிரையம் செய்துள்ளார்கள், பொய்ப்பத்திரம் உருவாக்கி உள்ளார்கள், திருட்டு கிரையம் செய்துள்ளார்கள். திருட்டு கிரையம் செய்ததற்கு சின்னசாமி, பொன்னுசாமி மகன் குருசாமி, மாரிமுத்து, ரங்கநாதன், சென்ட்ராயன் ஆகியோர் சின்னத்தம்பி மனைவி மாரியம்மாள் மற்றும் அவரது மகன் குருசாமிக்கு உடந்தையாக இருந்துள்ளார்கள். அனைவரும் கூட்டுச் சதி செய்துள்ளனர். அதற்கு சென்னிமலையைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவர் பத்திரம் கொடுத்து உதவியுள்ளார். என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக, நான் தாக்கல் செய்த புகாரின் அடிப்படையில் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் மேல் நடவடிக்கையை கைவிடுவதாக குறிப்பிட்டு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையிலான RCS உத்தரவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.**1 ஆகும்.

8) மேற்படி மேல் நடவடிக்கை கைவிடுவது தொடர்பாக போலீசாரிடமிருந்தோ அல்லது நீதிமன்றத்திலிருந்தோ எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம், அம்மாபேட்டை காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் நகல் ஆகும்(அது புகைப்பட நகல் என்பதால் குறியீடு செய்யப்படவில்லை). என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு மேல் நடவடிக்கை கோரி கொடுக்கப்பட்ட புகார் நகல் ஆகும்(அது புகைப்பட நகல் என்பதால் குறியீடு செய்யப்படவில்லை). மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் Crl.OP.4098/2010 ன் உத்தரவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆகும். எதிரிகள் மீது ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3** ஆகும். என்னை விசாரணைக்கு முன்னிலையாகச் சொல்லி ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் வழங்கிய அழைப்பாணையின் அசல் **ம.சா.ஆ.4** ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம், எனது பள்ளி மாற்றுச் சான்றிதழின் நகல் ஆகும்(அது புகைப்பட நகல் என்பதால் குறியீடு செய்யப்படவில்லை). நான் அரசு மேல்நிலைப்பள்ளி குருவரெட்டியூரில் பயின்றதைக் காட்டக்கூடிய தலைமை ஆசிரியர் சான்றின் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.5** ஆகும். குருசாமி என்பவரது இறப்புச்சான்று **ம.சா.ஆ.6** ஆகும்.

9) குருசாமி என்பவரது வாரிசு சான்றின் புகைப்பட நகல் **ம.சா.ஆ.7** ஆகும்(அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது). செல்லமுத்து என்பவர் மாரியம்மாள் என்பவருக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பு அசல் **ம.சா.ஆ.8** ஆகும். சி.குருசாமி என்பவரது பள்ளிச்சான்றின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.9** ஆகும். சி.குருசாமி என்பவரது ஓட்டுநர் உரிமத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.10** ஆகும். சி.குருசாமி என்பவரது பெயரிலான TN 30 Y 7830 வாகனத்தின் பதிவு சான்றின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.11** ஆகும். 1ம் எதிரி குருசாமி என்பவர் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றதற்கான ஆவணத்தின் பதிவு நகல் **ம.சா.ஆ.12** ஆகும். ஸ்ரீராம் கடன் நிறுவனத்தில் 1ம் எதிரி கடன் பெற்றதற்கான MOD யின் பதிவு நகல் **ம.சா.ஆ.13** ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1ம் எதிரியின் ஆதார் அடையாள அட்டையின் நகல் ஆகும்(அது புகைப்பட நகல் என்பதால் குறியீடு செய்யப்படவில்லை).

10) ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.206/2011 வழக்கில் சங்ககிரி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.14** ஆகும். 30.12.1996 ம் தேதியிட்ட விவாகரத்து ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.15** ஆகும். 30.12.1996 ம் தேதியிட்ட பொது பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.16** ஆகும். 30.12.1996 ம் தேதியிட்ட ஜீவனாம்ச பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.17** ஆகும். மேற்படி மூன்று ஆவணங்களும் அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்டது ஆகும். அது குறித்து எனது தகப்பனார் என்னிடம் எதுவும் கூறியது இல்லை. 29.07.2005 ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.18** ஆகும். 26.04.2006 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.19** ஆகும். அசல் வழக்கு எண்.21/2006 வழக்கில் பவானி சார்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.20** ஆகும்.

11) 1, 2 எதிரிகளுக்கு ஆதரவாக பவானி இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிரான மேல் முறையீடு பவானி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 1 வது எதிரி பிரதிவாதியாக இருந்து தாக்கல் செய்யப்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பவானியில் இ.ம.எண்.58/88 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இறுதி தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.21** ஆகும். குருசாமிக் கவுண்டர் மற்றும் சித்தகவுண்டர் ஆகியோர் பெயரிலான பட்டா பாஸ் புத்தகம் **ம.சா.ஆ.22** ஆகும். எனது அப்பா S. குருசாமியின் வங்கி கணக்கு புத்தகம் **ம.சா.ஆ.23** ஆகும். அதிலிருக்கும் புகைப்படத்திலிருப்பவர் எனது தந்தை ஆவார். IOB வங்கியில் எனது அப்பா வைத்திருந்த கணக்கின் பாஸ் புத்தகம் **ம.சா.ஆ.24** ஆகும். கதவு எண்.1139A தொடர்பான வீட்டு வரி ரசீதுகளின் படி நகல் **ம.சா.ஆ.25(2 வரிசைகள்)** ஆகும்.

12) குருசாமி என்பவர் பெயரிலான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ரசீதுகள் **ம.சா.ஆ.26 (4 வரிசைகள்)**. எனது தந்தை சி. குருசாமி குருவரெட்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக இருந்ததற்கான அடையாள அட்டை **ம.சா.ஆ.27** ஆகும். எனது தந்தை குருசாமி பெயரிலான உர அடையாள அட்டைகள் **ம.சா.ஆ.28 (2 வரிசைகள்)**. குருசாமி என்பவர் பெயரிலான கூட்டுறவு நில அடமான

வங்கி பாஸ் புத்தகம் **ம.சா.ஆ.**29 ஆகும். மேற்படி வங்கியிலிருந்து குருசாமி என்பவருக்கு அனுப்பப்பட்ட நினைவூட்டுதல் கடிதம், ரசீதுகள் ஆகியவை **ம.சா.ஆ.**30 **(26 வரிசைகள்)** ஆகும். குருசாமி என்பவர் பெயரிலான சக்தி சுகர்ஸ் அடையாள அட்டை **ம.சா.ஆ.**31 ஆகும். குருசாமி என்பவர் சக்தி சுகர்ஸ் நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் **ம.சா.ஆ.**32 ஆகும். சக்தி சுகர்ஸ் நிறுவனத்தின் உரமிடுவதற்கான ரசீது மற்றும் அட்டை **ம.சா.ஆ.**33 **(2 வரிசைகள்)** ஆகும். குருசாமி என்பவருக்கு 06.08.69 தேதியிட்டு வழங்கப்பட்ட வவுச்சர் **ம.சா.ஆ.**34 ஆகும். குருசாமி என்பவருக்கு கூடுதல் விலை வழங்கப்பட்டதற்கான ரசீது **ம.சா.ஆ.**35 ஆகும்.

13) குருசாமி என்பவர் சிறுகுறு விவசாயி என்பதற்கான அடையாள அட்டை மற்றும் தாசில்தார் வழங்கிய சான்று **ம.சா.ஆ.**36 **(2 வரிசைகள்)** ஆகும். எனது அப்பா குருசாமி பெயரிலான திரும்பப் பெறப்பட்ட கடன் உறுதிச் சீட்டுகள் **ம.சா.ஆ.**37 **(6 வரிசைகள்)** ஆகும். தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து எனது அப்பா குருசாமிக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் அசல் **ம.சா.ஆ.**38 **(2 வரிசைகள்)** ஆகும். எனது அப்பா குருசாமி பெயரிலான மின் கட்டண அட்டைகள் மற்றும் ரசீதுகள் **ம.சா.ஆ.**39 **(13 வரிசைகள்)** ஆகும். எனது அப்பா குருசாமி பெயரிலான கந்தாய ரசீதுகள் **ம.சா.ஆ.**40 **(6 வரிசைகள்)** ஆகும். எனது அப்பா குருசாமி என்பவர் காச நோய்க்கு சிகிச்சை பெற்றதற்கான அட்டை **ம.சா.ஆ.41** ஆகும். எனது தந்தை குருசாமி காசநோய்க்கு சிகிச்சை பெற்றதற்கான பரிந்துரைக் கடிதம் மற்றும் ரசீதுகள் **ம.சா.ஆ.**42 **(13 வரிசைகள்)** ஆகும்.

14) புகார்தாரரின் பள்ளிச் சான்று அடங்கிய குறிப்பாணை **ம.சா.ஆ.**43**(3 வரிசைகள்)** ஆகும். 14.09.2001 ம் தேதியிட்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.44 ஆகும்.** 04.12.2013 ம் தேதியிட்ட தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.45** ஆகும். மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், **CRP.No**.4671, 4672/2014 என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவு **ம.சா.ஆ.46** ஆகும். அசல் வழக்கு எண்.21/2006 வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.**47 ஆகும். அசல் வழக்கு எண்.115/2007 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட

உ.ந.மு.ச. கட்டளை 6, பிரிவு 17ன் கீழான மனுவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.48** ஆகும். **I.A.No**.9/2010 மனுவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.49** ஆகும். **I.A.No**.316/2013 மனுவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.50** ஆகும். மேற்படி பழனிச்சாமி என்பவர் மீது தவறான பத்திரம் பதிந்தது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட ஈரோடு மாவட்டக் குற்றப்பிரிவு (**DCB**, **Erode**) காவல் நிலைய குற்ற எண்.15/2018ன் முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.51** ஆகும். அதன் இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.52** ஆகும். எதிரிகள் என்னுடைய சொத்தை அபகரிக்க ஆள்மாறாட்டம் செய்து போலியான ஆவணம் தயார் செய்து, கூட்டுச் சதி செய்து, ஆவணங்கள் தயார் செய்தும், மற்ற எதிரிகள் உடந்தையாக இருந்ததாலும் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு காலஅவகாசம் கோரப்பட்டதால், குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**